செய்தி வெளியீடு எண். 08-2017 நாள்: 04.07.2017

# விழுப்புரம் மாவட்டம் பள்ளி கல்வித்துறை சார்பாக குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின்கீழ் சிறுபான்மையற்ற தனியார் சுயநிதிப் பள்ளிகளில் நுழைவு நிலை வகுப்பில் (LKG/I std) 25% ஒதுக்கீட்டின்கீழ் மாணவர் சேர்க்கைக்கு 25.07.2017 வரை விண்ணப்பிக்க கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

*****

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009, சட்டப்பிரிவு 12(1)(சி)ன் கீழ் சிறுபான்மையற்ற தனியார் சுயநிதிப் பள்ளிகளில் நுழைவு நிலை வகுப்பில் 25% ஒதுக்கீட்டில் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகளைச் சேர்க்கை செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள 3714 காலியடங்களுக்கு இரண்டாவது கட்டமாக இணைய வழியாக விண்ணப்பிக்க 03.07.2017 முதல் 25.07.2017 வரை கால அவகாசம் வழங்கப்பட்டு இணைய வழியான சேர்க்கைக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

நிர்ணயிக்கப்பட்ட இடங்களுக்குச் சமமாகவோ, அதைவிடக் குறைவாகவோ விண்ணப்பங்கள் பெறப்பட்டிருப்பின், விண்ணப்பித்துள்ள தகுதியான அனைத்துக் குழந்தைகளுக்கும் சேர்க்கை வழங்கும் பொருட்டு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களால், 28.07.2017 அன்று சார்ந்த பள்ளிக்கு குழந்தைகளின் பெயர்ப் பட்டியல் வழங்கப்படும்.

நிர்ணயிக்கப்பட்ட இடங்களைவிடக் கூடுதலாக விண்ணப்பங்கள் பெறப்பட்டிருக்கும் பள்ளிகளில், 29.07.2017 அன்று குலுக்கல் முறையில் சேர்க்கைக்கான குழந்தைகள் தெரிவு செய்யப்படுவர். குலுக்கல் நடத்தும் பொருட்டு கல்வித்துறை சார்ந்த பிரதிநிதி ஒருவரும், மாவட்ட ஆட்சித்தலைவரால் நியமனம் செய்யப்படும் பிரதிநிதி ஒருவரும் ஒவ்வொரு பள்ளிக்கும் அனுப்பிவைக்கப்படுவார்கள்.

சேர்க்கைக்கு விண்ணப்பித்துள்ள குழந்தைகளின் பெற்றோர் மற்றும் பள்ளி முதல்வர் முன்னிலையில் குலுக்கல் நடைபெறும். விண்ணப்பங்கள் அதிக அளவில் பெறப்பட்டுள்ள பள்ளிகளில் குலுக்கல் நடைபெறும்போது, மாவட்டக் கல்வித்துறை உயர் அலுவலர்கள் மற்றும் வருவாய்த்துறை உயர் அலுவலர்கள் சென்று பார்வையிடுவர்.

முதலாவதாக வாய்ப்பு மறுக்கப்பட்ட சிறப்புப் பிரிவினர்களான, ஆதரவற்றவர்/ எச்.ஐ.வி. பாதிக்கப்பட்ட குழந்தைகள்/ மூன்றாம் பாலினத்தவர்/ துப்புரவு தொழிலாளியின் குழந்தைகள்/ மாற்றுத் திறனாளியாக உள்ள குழந்தைகள் போன்றோரிடமிருந்து பெறப்பட்ட தகுதியான விண்ணப்பங்கள் குலுக்கல் இன்றிச் சேர்க்கைக்குத் தேர்வு செய்யப்படும்.

அதன்பின்னர் மீதமுள்ள இடங்களுக்கு ஒரு கிலோமீட்டர் தொலைவிற்குள் இருப்பிடத்தில் வசிக்கும் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகளிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்களைக் கொண்டு குலுக்கல் நடத்தப்படும். அவ்வாறு குலுக்கல் நடத்தப்பட்ட பின்னரும் நிர்ணயிக்கப்பட்ட இடங்களில் காலியிருப்பின்,

ஒரு கிலோமீட்டர் தொலைவிற்கும் அதிகமாக இருப்பிடத்தில் வசிக்கும் குழந்தைகளிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்களைக் கொண்டு குலுக்கல் நடத்தப்படும்.

ஒவ்வொரு பள்ளிக்கும் நுழைவுநிலை வகுப்பின் ஒவ்வொரு பிரிவிற்கும் 5 இடங்கள் வீதம் காத்திருப்புப் பட்டியல் குலுக்கல் முறையில் தயார் செய்யப்படும். குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்ட குழந்தைகள் பள்ளியில் சேரவில்லையெனில் காத்திருப்புப் பட்டியலிலிருந்து சேர்க்கை வழங்கப்படும்.

சேர்க்கைக்குத் தெரிவு செய்யப்பட்ட குழந்தைகள் பட்டியல், காத்திருப்புப் பட்டியலில் கல்வித் துறை சார்ந்த பிரதிநிதி/ வருவாய்த்துறை சார்ந்த பிரதிநிதி, பள்ளியின் முதல்வர் மற்றும் குலுக்கலில் கலந்து கொண்ட பெற்றோர்கள் கையொப்பமிட்டு 29.07.2017 அன்றே பள்ளி தகவல் பலகையில் வெளியிடப்படும்.

சேர்க்கைக்கு தேர்வு செய்யப்பட்ட குழந்தைகளுக்கு 29.07.2017க்குள் சம்மந்தப்பட்ட பள்ளியில் சேர்க்கை வழங்கப்படும்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.